(பிற்பகல் 4-40)

6. தகவல் கோரல்.

போலீஸ் ஐ. ஜி. அலுவலகத்தில் தேசீயக் கொடிக்குப் பதிலாக வேறொரு கொடி பறப்பது குறித்து.

திரு. மு. மாசிலாமணி : தலைவரவர்களே, நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைப் பெற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்பின் மீது அதைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்தான் இருமுறை பேசலாம். இதிலே வேறு யாரும் பேச அனுமதிப்பதற்றில்லை.

திரு. மு. மாசிலாமணி : தலைவரவர்களே, நான் அரசாங்கத்தின் விளக்கத்தைப் பெற விரும்புவது வேறு ஒரு விஷயத்தைப் பற்றியது இன்று காலை கடற்கரை வழியாக வரும்போது ஐ.ஜி. அலுவலகத்தில் வழக்கமாக நமது தேசியக் கொடி பறப்பதற்குப் பதிலாக வேறு ஒரு கொடி பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். இது குறித்து இன்று காலை சட்டப் பேரவையில் நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தையும் கேட்டேன். ஆனால் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் தேசியக் கொடி பறந்து கொண்டிருக்கின்றது. அங்கேயும் இப்படிப்பட்ட புதிய கொடி பறக்கவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காலையில் சட்டப் பேரவையில் அளித்த விளக்கத்தை அவர் கேட்ட பிறகும், புதிதாக விளக்கமளிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் என்ன விளக்கம் கொடுத்தார் என்று தெரியாது. இது தனி அவை. துணை அவை இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அங்கே கொடுத்துவிட்டதால் அந்த விளக்கத்தை இம்மன்றத்தில் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. இதைப் பற்றிக் குறிப்பிட்ட உறுப்பினர் அவர்கள் பிரச்சினையை எழுப்பிய போதே "சட்டப் பேரவையில் கொடுத்த விளக்கத்தை நான் கேட்டேன்" என்று சொல்லி விட்டார். ஆகவேதான் அந்த பதிலை நான் சொன்னேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதை இப்போது சொல்லலாமே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடந்த வாரம் டெல்லியிலிருந்து மத்திய அரசிடமிருந்து நமது மாநில காவல்துறைத் தலைவர் அலுவலகத்திற்கு வந்த உத்தரவின்படி, ஐ.ஜி. அலுவலகத்திலே தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த 20 ஆண்டு காலமாகப் பறந்து கொண்டிருந்த தேசீயக் கொடி

பறக்கத் தேவையில்லை என்ற உத்தரவு வந்த பிறகு, ஐ.ஜி. அவர்கள் அரசுக்கு இது பற்றி எழுதினார்கள். "தேசீயக் கொடியைப் பறக்க விடக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கின்றதே, அதற்குப் பதிலாக வேறு எந்தக் கொடியைப் பறக்க விடலாம்?" என்று கேட்டு எழுதியிருந்தார்கள். "அதற்குப் பதிலாக போலீஸ் துறை பயன்படுத்தும் வண்ணமான நீல வண்ணக் கொடியில் தமிழக அரசின் சின்னத்தைப் பதித்து அதைப் பறக்க விடுங்கள்" என்று தமிழக அரசு அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அதன்படி இன்று காலையிலிருந்து அந்தக் கொடி பறக்க விடப்படுகின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, என் தேசீயக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டிருக்கின்றது? அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கோவா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலே இது பற்றிய பிரச்சினை எழுந்ததாகவும் அதன் தொடர்பாக எல்லா மாநிலங்களிலுமே ஐ.ஜி. அலுவலகங்களில் இந்தக் கொடியினைப் பறக்கவிட வேண்டாம் என்றுதான் இந்த உத்தரவு வந்திருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தலைமைச் செயலகத்தில் தேசீயக் கொடி பறக்கலாமா அல்லது வேறு ஏதாவது கொடி பறக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டு கொடிகளுமே பறக்கலாம் என்று சொன்னால் மகிழ்ச்சியோடு வரவேற்கலாம்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, தேசீயக் கொடி ஐ.ஜி. அலுவலகத்தில் மட்டுமா அல்லது அனைத்து போலீஸ் அலுவலகங்களிலும் பறக்க விடக் கூடாது என்று சொன்னார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்போது வந்துள்ள உத்தரவில், ஐ.ஜி. அலுவலகங்களில் மட்டும் பறக்க விடக் கூடாது என்று கண்டிருக்கின்றது.

7. 1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே 1975–76 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையினை என் கட்சியின் சார்பில் வரவேற்றுச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS